Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/18.10 hrs/14.11.2025

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 14.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பீகாரில் இன்று நடைபெறும் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், தேசிய ஜனநாயக கூட்டணி, அமோக வெற்றி பெற்று வருகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத் மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்களை வழங்கும் பணிகள், 91.20 சதவிகிதம் முடிந்து விட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

புதுச்சேரியில், இன்று நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமை ஏற்று, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

*பீகார்*

பீகாரில் இன்று நடைபெறும் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், தேசிய ஜனநாயக கூட்டணி, அமோக வெற்றியை நோக்கி முன்னேறி வருகிறது. மொத்தம் உள்ள 243 தொகுதிகளில், தேசிய

ஜனநாயக கூட்டணி, இதுவரை 18 தொகுதிகளில் வெற்றி பெற்று, 191-தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. ஆர்ஜேடி தலைமையிலான மகாகட்பந்தன் கூட்டணி வேட்பாளர்கள், 2 தொகுதிகளில் வெற்றி பெற்று 25 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன. பிரசாந்த் கிஷோர் தலைமையிலான ஜன் சுராஜ் கட்சி, வாக்கு எண்ணிக்கை தொடர்பான நிலவரப் பட்டியலில் இடம் பெறத் தவறியது.

பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு, முன் என்போதும் இல்லாத அளவில், வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை வழங்கிய மக்களுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். இது, நல்லாட்சி, வளர்ச்சி, சமூக நீதி மற்றும் மக்கள் நலனுக்கு கிடைத்த வெற்றி என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். இந்த மாபெரும் மக்கள் ஆதரவினால், புதிய உறுதிப்பாட்டுடன் பீகார் மக்களுக்கு சேவை புரியும் அதிகாரம் அரசுக்கு கிடைக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். பிஜேபி தலைவர் திரு ஜே பி நட்டா, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, ஆகியோரும், பீகார் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

முர்மு-தினம்

குழந்தைகள் தினமான இன்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையின் கலாச்சார மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகளை சந்தித்து கலந்துரையாடினார். வந்தே மாதரம் தேசப் பக்தி பாடலை சில

குழந்தைகள் பாடியது உட்பட இந்த சந்திப்பின் மகிழ்ச்சிகரமான தருணங்களை சமூக ஊடகத்தில் அவர் பகிர்ந்து கொண்டுள்ளார். குழந்தைகள் தான் நாட்டின் எதிர்காலம் என்பதால், தன்னம்பிக்கையும், பொறுப்பும் நிறைந்த குடிமக்களாக குழந்தைகளை பேணி வளர்த்தல் அவசியம் என்றும், குடியரசு தலைவர் கூறி உள்ளார்.

*சி.பி. ராதாகிருஷ்ணன்*

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்தியா வளமான நாடாக விரைந்து மேம்பட்டு வருவதாக குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார். இன்று ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில், மாநில அரசும் இந்திய தொழில்கள் கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, கூட்டாண்மை உச்சி மாநாட்டை அவர் தொடக்கி வைத்தார். டிஜிட்டல் பொது கட்டமைப்பு மற்றும் இ-ஆளுகை வசதிகளால் நாட்டில் மக்களுக்கான அரசின் சேவைகள் விரைந்து வழங்கப்படுவதாகவும், தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும் கூறினார். ஆந்திர மாநிலம் இந்தியாவின் முக்கிய முதலீட்டு கேந்திரங்களில் ஒன்றாக திகழ்வதை அவர் சுட்டிக்காட்டி, இதைக் கொண்டு வலுவான பலன்களை ஈட்டும் வகையில், மத்திய-மாநில அரசுகள் ஒருங்கிணைந்து வருவதாக தெரிவித்தார். ஆந்திரப் பிரதேசம், எளிதாக வர்த்தகம் புரிவதற்கு ஏற்ற மாநிலம் என்பதில் இருந்து, விரைவாக வர்த்தகம் புரிவதற்கு ஏற்ற மாநிலம் என்ற நிலைக்கு மேம்பட்டுள்ளதாக ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு

நாயுடு இந்நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் உட்பட பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மோடி-குஜராத்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத் மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்கிறார். பிரதமரின் குஜராத் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்...............

(வாய்ஸ்)

குஜராத் மாநிலம் சூரத்தில், தற்போது கட்டப்பட்டு வரும் புல்லட் ரயில் நிலையத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பார்வையிட்டு, மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் பாதை திட்டத்தின் அமலாக்கத்தில ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறார். பின்னர் நர்மதா மாவட்டத்தில் உள்ள தேவ்மோக்ரா கோவிலில் பிரதமர் தரிசனம் செய்கிறார். தொடர்ந்து டேடியாபாடாவில், தர்த்தி ஆபா பகவான் பீர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாள் விழாவில் அவர் கலந்து கொள்கிறார். இவ்விழாவின் போது மொத்தம் 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பிரதமரின் ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் இயக்கத்தின் கீழ் கட்டப்பட்ட

வீடுகளின் கிரகப் பிரவேச விழாவிலும் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*சார்-நாடு*

நாட்டில் இரண்டாம் கட்டமாக, 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தற்போது நடைபெறும், **சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி**களின் கீழ், தற்போதுள்ள வாக்காளர்களுக்கு **கணக்கெடுப்பு படிவங்களை** வழங்கும் பணிகள், 91.20 சதவிகிதம் முடிந்து விட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் இப்பணிகள், 87.66 சதவிகிதமும், புதுச்சேரியில் 93.63 சதவிகிதமும் முடிந்திருப்பதாக, தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ரங்கசாமி-குழந்தைகள்*

புதுச்சேரியில், பள்ளிக் கல்வித் துறை சார்பில், கருவடிக்குப்பம் காமராஜர் மணி மண்டபத்தில் இன்று நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமை ஏற்று, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறந்த கல்வி அளிப்பது அரசின் கடமை என்றும், இதைக் கருத்தில் கொண்டே ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இவ்வாண்டு அரசுப் பள்ளி மாணவர்கள் 36 பேர், 10 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ்

மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருப்பதாக அவர் தெரிவித்தார். மாணவர்களின் ஆரோக்கியத்தை பேணும் வகையில், காலையில் பால், மதியம், முட்டையுடன் கூடிய சத்துணவு, மற்றும், மாலையில், சிறுதானிய சிற்றுண்டி வழங்கப்படுவதையும், விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப் படுவதால் புதுச்சேரியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வெளி மாநிலங்களில் பல போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று வருவதையும் முதலமைச்சர் சுட்டிக் காட்டினார். பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர் கல்லூரியில் சேர ஏதுவாக, பல அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் தொடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முதலமைச்சரின் உரையில் இருந்து ஒரு பகுதி ………………… (வாய்ஸ்-ரங்கசாமி)

குழந்தைகள் தின விழாவில், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், பள்ளிக் கல்வித் துறை இணை இயக்குநர் சிவகாமி, சமக்ர சிக்‌ஷா திட்ட இயக்குநர் எழில் கல்பனா, மற்றும், கல்வித் துறை அதிகாரிகளும், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

கைலாஷ்நாதன்

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று, மாகே பகுதிக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். மாகேயில், அன்னைதெரசா செவிலியர் பயிற்சி கல்லூரியை அவர் திறந்து வைக்கிறார். மாகே அரசுப் பொது மருத்துவமனையில் புதிய சமையல் கூடக் கட்டிடத்தையும் அவர் திறந்து வைக்கிறார். மாகேயில் டிரோன்கள் மூலமான நவீன டிஜிட்டல்

கணக்கெடுப்பு திட்டத்தை துணை நிலை ஆளுநர் தொடக்கி வைத்து, முதியோர் ஓய்வூதிய திட்டத்திற்கான புதிய பயனாளிகளுக்கு, ஓய்வூதிய ஆணைகளையும் வழங்குவதாக மாகே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி-நேரு*

பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாளான இன்று புதுச்சேரியில் கடற்கரை சாலையில் உள்ள அன்னாரின் சிலைக்கு, பொது பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமி காந்தன் ஆகியோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து முன்னாள் முதலமைச்சர் திரு நாராயணசாமி, பிரதேச காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு வைத்திலிங்கம் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் நேரு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். முன்னதாக பிரதேச காங்கிரஸ் அலுவலகத்தில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

*தகுதி தேர்வு*

தமிழ்நாடு ஆசிரியர் தகுதி தேர்வு நாளை நடைபெற உள்ளதை ஒட்டி, புதுச்சேரியில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து கல்வித் துறை உத்தரவு அறிவித்துள்ளது. இதை ஈடுசெய்யும் வகையில்,

வரும் ஜனவரி 3-ஆம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்று, தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நெல்லை மாவட்டம் மலைப் பகுதிகள், மற்றும், தேனி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 20-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், மற்றும், வங்க கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில், 7 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

ஆடவர்-கிரிக்கெட்

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே கொல்கத்தாவில் இன்று தொடங்கி உள்ள முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய தென்னாப்பிரிக்க அணி, 159 ரன்னுக்கு, முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்த நிலையில், அடுத்து

ஆடும் இந்திய அணி, ஆட்ட நேர இறுதி வரை, 1- விக்கெட் இழப்பிற்கு, 37 ரன் எடுத்திருந்தது.

*பணவீக்கம்*

மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த அக்டோபர் மாதத்தில் மைனஸ் 1.21 சதவிகிதமாக, மேலும் குறைந்துள்ளது. இது அதற்கு முந்தைய மாதத்தில் 0.13 சதவிகிதமாக இருந்தது. பணவீக்கம் எதிர்மறைப் போக்கில் குறைந்ததற்கு உணவு பொருட்கள், மின்சாரம், கச்சா எண்ணெய்யின் விலை குறைந்ததே முக்கிய காரணம் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*பிஐபி-மறுப்பு*

எளிய முறையில் அன்றாட வருமானம் அளிக்கும் வகையிலான முதலீட்டு திட்டம் ஒன்றை ஆதரித்து பிரதமர் திரு நரேந்திர மோடி பேசுவது போல் சமூக ஊடகங்களில் உலா வரும் டிஜிட்டல் மோசடி வீடியோவை, அரசு நிராகரித்து உள்ளது. இந்த வீடியோ போலியானது என்றும், இத்தகைய திட்டம் பற்றிய அறிவிப்பு எதையும் அரசு வெளியிடவில்லை என்றும், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு தெரிவித்துள்ளது. இத்தகைய மோசடிகள் குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் இதுபோன்ற தகவல்களை பகிர்ந்து கொள்ளும் முன்பாக உண்மைகளை சரிபார்த்துக் கொள்ளுதல் அவசியம் என்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

ராணுவ சேவை

புதுடெல்லியில் உள்ள, ஐக்கிய ராணுவ சேவைகள் கழகத்தில், இந்திய ராணுவத்தின் பாரம்பரிய மரபுகள் பற்றிய திருவிழாவை, பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு சஞ்சய் சேத், இன்று தொடக்கி வைத்தார். சேவை உணர்வு, உறுதிப்பாடு, மற்றும், ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் தேசிய பாதுகாப்பிற்கு பாடுபடுவதே இந்திய ராணுவத்தின் பாரம்பரிய மரபு என்றும், இந்தியாவின் பாதுகாப்புத் தயார் நிலையில், உள்நாட்டு மயம், புதுமையாக்கம், மற்றும், புதிய தொழில் நுட்பங்களின் பயன்பாட்டிற்கு, முக்கிய இடம் இருப்பதாகவும் அவர் கூறினார். நீண்டகால அடிப்படையில் நாட்டின் போர் திறன்களை உயர்த்துவதில், இளைஞர்கள், மற்றும், தொழில்துறையினரின் பங்கேற்பு அதிகரித்து வருவது குறித்து, அமைச்சர் மகிழ்ச்சி வெளியிட்டார். போர் முறைகள் பற்றிய சுக்ரநீதி நூலையும், ஐ நா அமைதி காக்கும் பணிகளில் இந்தியாவின் பங்களிப்பு குறித்த தொகுப்பையும் விழாவின் போது அவர் வெளியிட்டு, பாதுகாப்பு படையினருக்கு விருதுகள் மற்றும் பாராட்டு பத்திரங்களையும் வழங்கிச் சிறப்பித்தார். இந்த 2 நாள் விழாவில், நாட்டின் வரலாறு குறித்தும், ராணுவ மரபுகளை, சமகால பாதுகாப்பு தேவைகளுடன் இணைப்பது குறித்தும், கண்காட்சி, குழு விவாதம், கலந்துரையாடல் உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பீகாரில் இன்று நடைபெறும் சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், தேசிய ஜனநாயக கூட்டணி, அமோக வெற்றி பெற்று வருகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை குஜராத் மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்கிறார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்களை வழங்கும் பணிகள், 91.20 சதவிகிதம் முடிந்து விட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

புதுச்சேரியில், இன்று நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமை ஏற்று, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------